**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்.**
**முன்னிலை. திருமதி.M.முருகானந்தி, B.Sc., B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, வேடசந்தூர்**
2021ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ம் நாள் திங்கள்கிழமை
**I.A.546/2017 in O.S.269/2013**

வேலன் ... மனுதாரர் / புரோ 5ம் பிரதிவாதி

/எதிர்/

1. அடைக்கன்
2. கணேசன்
3. மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல்
4. மாவட்ட வருவாய் அலுவலர், திண்டுக்கல்
5. வட்டாட்சியர், வேடசந்தூர்.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 07.11.2017ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 15.12.2021ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதார் / புரோ 5ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.செல்வக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.கணேசன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜான்கிருபாகரன் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், மனு மற்றும் அபிடவிட் ஆகியவற்றை பரிசீலித்தும் பின்னர் இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று (20.12.2021) இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்....

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைசட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் /புரோ 5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>**

மனுதார் / வாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அதில், தாவா அசல் வழக்கானது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும்,

வேடசந்தூர் தாலுகா, அய்யலூர் கிராமம் புல எண் 1057/7ல் மொத்த விஸ்தீரணம் 49 செண்ட் என்றும், இந்த 49 செண்ட் நிலத்தில் பிரிவினையில்லாத 1/3 பங்கு மனுதாருக்கு பாத்தியட்டதென்றும், இந்த சொத்து தொடர்பாக 2ம் எதிர்மனுதாரர் இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.226/97ல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கிட்டதாகவும், இந்த மனுதாரர் 1ம் பிரதிவாதியாக இருந்து வழக்கறிஞர் மூலமாக பதிலுரை தாக்கல் செய்யததாகவும், மேற்படி வழக்கில் வாதி இந்த மனுதாரின் உரிமையை ஒத்துக்கொண்டு 08.10.1999ம் தேதி வாபஸ் பெற்றுக்கொண்டதாகவும், பின்னிட்டு 02.06.2011ம் தேதியில் இந்த வழக்கின் வாதி சர்வே எண்.1057/7ல் உள்ள 49 செண்ட் நிலம் முழுவதும் தனது மனைவி பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி ஆவணத்தை மறைத்து சொத்து தனக்கு மட்டும பாத்தியட்டதென கூறி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி மோசடியாதென்றும், தாவா "2" லக்க சொத்தில் இந்த மனுதாரருக்கு பிரிவினை இல்லாத 1/3 பங்கு பாத்தியப்பட்டுள்ளதென்றும், எனவே இந்த வழக்கில் மனுதாரரை 5ம் பிரதிவாதியாக சேர்த்து மேல் நடத்த நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும், எனவே, மனுதாரரை/ புரோ 5ம் பிரதிவாதியாக சேர்த்து கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>3) 1ம் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு அதில், சர்வே எண்.1057/7ல் 49 செண்ட் நிலம் முழுவதும் 1ம் எதிர்மனுதாரரின் மனைவிக்கு 02.06.2011ம் தேதியில் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததாகவும், வழக்கு சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளதாகவும், மேற்படி சொத்தை மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் எந்த உரிமையும் அனுபவமும் கிடையாது என்றும், அசல் வழக்கு எண்.227/1997 வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் வழக்கில் தரப்பினர் அல்ல என்றும், 1ம் எதிர்மனுதாரர் அவரது மனைவிக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் நடைமுறைக்கு வரவில்லை என்றும், மேற்படி சொத்தின் சுவாதீனம் 1ம் எதிர்மனுதாரரிடமே உள்ளதாகவும், மேலும் 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மனுதாரருக்கு யாதொரு உரிமையும் அனுபவமும் இல்லாத நிலையில் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியதில்லை என்றும், எனவே மனுதாரரின் மனுவை

செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>4) 2ம் எதிர்மனுதாரர் /1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

2ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு அதில், பட்டா எண்கள் 86, 2545ல் சர்வே எண்கள் 684/2, 1057/7 மற்றும் 1057/6ல் 1 ஏக்கர் 52 சென்ட் நிலம் 1, 2 எதிர்மனுதாரர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டு, அனுபவம் செய்து வருவதாகவும், இதில் மனுதாரருக்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும் எனவே இந்த வழக்கில் மனுதாரரை பிரதிவாதியாக சேர்க்கக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.** இந்நிலையில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டிய பிரச்சனையாகும்.

**6.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மற்றும் 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7.** **<u>தீர்வு</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. தாவா சொத்தில் மனுதாரருக்கு பிரிவினையில்லா 1/3 பங்கு பாத்தியம் உள்ளதால் மனுதாரரை 5ம் பிரதிவாதியாக அசல் வழக்கில் சேர்க்க வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் மனுதாரரை 5ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொள்ள ஆட்சேபனை இல்லை என்பதாக மேற்குறிப்பு செய்துக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி மனுதாரரை 5ம் பிரதிவாதியாக சேர்க்கக்கூடாது 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதை வைத்து மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து கண்டறிய வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 02.06.2011ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் 1ம் எதிர்மனுதாரரால் அவரது மனைவிக்கு எழுதிக்

கொடுக்கப்பட்டு, ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை என்பதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்து 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்பதால் மனுதாரரை அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கப்படக்கூடாது என்பதாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

**8.** இந்நிலையில், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் 1, 2 எதிர்மனுதாரர்கள் பெயரில் உள்ள பட்டாவாகவும், எ.ம.சா.ஆ.5 சான்றாவணம் 1, 2 எதிர்மனுதாரர்கள் பெயரில் உள்ள சிட்டாவாகவும், எ.ம.சா.ஆ.6 சான்றாவணம் அடங்கலாகவும், எ.ம.சா.ஆ.7 அனுபவச்சான்றாகவும், எ.ம.சா.ஆ.8 சான்றாவணம் சொத்துவிபரங்களின் ஸ்டேட்மெண்ட் ஆகவும், எ.ம.சா.ஆ.9 சான்றாவணம் 2ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள விவசாயிகள் அடையாள அட்டையாகவும், எ.ம.சா.ஆ.10 சான்றாவணம் 1, 2 எதிர்மனுதாரர்கள் பெயரில் உள்ள கிஸ்தி ரசீதுகளாகவும் உள்ளதை வைத்து பார்க்கும்போது, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டுள்ளதுபோல், தாவா சொத்துக்கள் 1, 2 எதிர்மனுதாரர்கள் பெயரில் கூட்டாக உள்ளதாக தெரியவருகிறது.

**9.** இச்சூழ்நிலையில், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.11 சான்றாவணத்தில் அசல் வழக்கு எண்.226/1997 வழக்கில் மனுதாரர் 1ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு, இந்த அசல் வழக்கின் வாதி 4ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு மேற்படி அசல் வழக்கு எண்.226/1997 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு எண்.226/1997 வழக்கை அந்த வழக்கின் வாதியால் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி அசல் வழக்கிற்கு பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த அசல் வழக்கில் மேற்படி அசல் வழக்கு எண்.226/1997 யை பற்றி குறிப்பிடப்படாமல் வாதி தரப்பில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

**10.** மேலும், மேற்படி அசல் வழக்கு எண்.226/1997 ல் இந்த மனுவின் மனுதாரரை எந்த முகாந்திரத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது என்பதும்,

மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து கொண்டு அசல் வழக்கு எண்.226/1997 வழக்கை தாக்கல் செய்து அவர்களோகவே வாபஸ் பெற்றுக்கொண்டார்களா? என்பது குறித்தும் கண்டறிய அசல் வழக்கை முழு விசாரணைக்கு உட்படுத்தி அதனடிப்படையில் தான் தான் முடிவு காண இயலும் என்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.** மேலும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.13 சான்றாவணமான உயில் ஆவணம் 02.09.1968ம் தேதியிட்ட உயில் சாசனமாக உள்ள நிலையில், மேற்படி உயில் சாசனத்தின் நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 02.09.1968ம் தேதியிட்ட உயிலைப் பற்றியும், வாதியால் அசல் வழக்கில் சொல்லப்படவில்லை என்பதாகவே தெரியவருகிறது. மேற்படியான 02.09.1968ம் தேதியிட்ட உயில் சாசனம் உண்மையானதா? இல்லையா? என்பதெல்லாம் அசல் வழக்கின் விசாரணையின் முடிவில் தெரியவரும் என்றிருந்தாலும் கூட, மேற்படி 02.09.1968ம் தேதியிட்ட உயில் சாசனம் பற்றி வாதியால் பிராதில் குறிப்பிடப்படவில்லை என்பதாகவே தெரியவருகிறது.

**12.** மேலும், வாதியால் அவரது மனைவிக்கு 02.06.2011ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட பின்னிட்டுதான் வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற நிலையில், மேற்படியான 02.06.2011ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்பதாக தற்போது 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிட்டிருந்தாலும், அதைப் பற்றி அசல் வழக்கில் வாதியால் பிராதில் குறிப்பிட்டுக்காட்டப்படவில்லை என்பதாகவே தெரியவருகிறது. மேலும் மேற்படியான 02.06.2011ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படாத நிலையில், 1ம் எதிர்மனுதாரரால் மேற்கண்ட சங்கதிகள் மறைக்கப்பட்டு, அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13.** மேலும், மேற்கண்ட மனுவின் பொருண்மை மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், மனுதாரரை அசல் வழக்கில் சேர்த்து மேல்

நடத்தினால் தான் மனுதாரர் அவசியத்தரப்பினரா? இல்லையா? என்பது குறித்து தெரியவரும் என்பதாலும், 1ம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து கண்டறிய மனுதாரரை அசல் வழக்கில் சேர்த்து மேல்நடத்தினால் தான் முழுமையான தீர்வு கிடைக்கும் என்பதாக இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரரை அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்த்து அசல் வழக்கை மேல் நடத்தி கொள்ள அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு உபயதரப்பினர்களுக்கு செலவுத்தொகை கிடைக்கத்தக்கதல்ல என்று உத்தரவிடப்படுகிறது.

**14.** இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2021ம் வருடம் டிசம்பர் மாதம் 20ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M MURUGANANTHI

Digitally signed by M MURUGANANTHI
Date: 2022.02.16 20:22:11 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வேடசந்தூர்.**

**மனுதாரர் / புரோ 5ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

**1ம் எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

**3 முதல் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**

- இல்லை

**2ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் - இல்லை**

**2ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 12.02.1990 | T. கணேசன், அடைக்கன் பெயரில் உள்ள பட்டா எண்.86 | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 12.02.1990 | T. கணேசன், அடைக்கன் பெயரில் உள்ள | அசல் |

| **வ.எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| | | பட்டா எண்.2545 | |
| எ.ம.சா.ஆ.3 | 28.10.2003 | T. கணேசன், அடைக்கன் பெயரில் உள்ள கணினி பட்டா எண்.86 | கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 28.10.2003 | T. கணேசன், அடைக்கன் பெயரில் உள்ள கணினி பட்டா எண்.2545 | கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 12.08.1992 | T.கணேசன்,அடைக்கன் பெயரில் அய்யலூர் VAO வழங்கிய சிட்டா | அசல் |
| எ.ம.சா.ஆ.6 | 29.11.1988 | பட்டா எண்கள் 86, 2545 க்குரிய அடங்கல் (VAO வழங்கியது) | அசல் |
| எ.ம.சா.ஆ.7 | 28.11.2016 | பட்டா எண்கள் 86, 2545 க்குரிய அனுபவச்சான்று (VAO வழங்கியது) | அசல் |
| எ.ம.சா.ஆ.8 | 13.10.2000 | தனித்தனி ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்ட் | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.9 | 09.11.1992 | சிறு குறு விவசாயிகள் அடையாள அட்டை | அசல் |
| எ.ம.சா.ஆ.10 | -- | 08.03.1989, 09.03.1989, 14.10.1990, 11.04.1992, 09.05.1993, 03.05.1997, 25.03.1998 ஆகிய தேதிகளின் கிஸ்தி ரசீதுகள்(எண்ணிக்கை 7) | அசல் |
| எ.ம.சா.ஆ.11 | 08.10.1999 | O.S 226/1997 வழக்கின் தீர்ப்பு நகல் மற்றும் வழக்கின் நகல் | நகல் |
| எ.ம.சா.ஆ.12 | 02.19.1968 | உயில் சாசனம் | நகல் |

M MURUGANANTHI

Digitally signed by M MURUGANANTHI
Date: 2022.02.16 20:21:54 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வேடசந்தூர்.**